© பதிவெண்: எம். 3

தமிழ்நாடு அரசு

2019

# சேலம் மாவட்ட அரசிதழ்

சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

சேலம், செப்டம்பர் 07, 2019

[விகாரி, ஆவணி 21 - திருவள்ளுவர் ஆண்டு 2050]

[எண் 24

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

[ந.க.எண். 1665/2017/(எச்–1), நாள்: 06–09–2019]

### மேட்டூர் நகராட்சி (சேலம் மாவட்டம்)

அறிவிப்பு

**2019 ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் ஏற்படுத்தப்படும் உபவிதிகள்**

**மேட்டூர் நகர் மன்றத்தின் 08.03.2019ம் தேதிய தீர்மானம் எண்.61**

தமிழ்நாடுமாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 (28A) மற்றும் 2019ம் வருடத்திய தமிழ்நாடு (இரண்டாம் திருத்த) சட்டம் 12ன் படியும் (No.of 2019 the Tamilnadu Municipal Laws (Second Amendment) Act 2019 Published in Tamilnadu Government Gazette Extraordinary No.75. Dt.21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84, நாள்.25.06.2018–ன் படியும் மேட்டூர் நகராட்சி பகுதியில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு (Use and Through) மற்றும் தூக்கி வீசக்கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தும் ஏற்கனவே இயற்றப்பட்ட மேட்டூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 (சேலம் மாவட்ட அரசிதழ் எண்.7, நாள்.21.09.2018)–ல் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் நகராட்சியின் இந்த துணை விதிகள் குறித்து ஆட்சேபனைகள் மற்றும் கருத்துரு ஏதுமிருப்பின் நாளிதழில் வெளியிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொது மக்கள் மேட்டூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மேல் முறையீடு செய்ய அறிவிக்கப்படுகிறது.

